Topic - 'CSR - Handing Over Deeds'
Publication - Sunday Thinakkural (Business)
Date: 12 September 2010
Page - 20

# சூழல் பாதுகாப்புடன் கூடிய 'The Fairmount' சொகுசு மாடி வீட்டுத் திட்டம்

நகர்ப்புறத்தில் ஒரு காலத்தில் ஒதுக்கப்பட்ட கிராமமாக இருந்த ராஜகிரிய உண்மையில் ஆச்சரியப்படத்தக்க வகையில் மாற்றமடைந்துள்ளது. 31 மாடிகளைக் கொண்ட கண்கவர் கட்டிடம் உஷ்ணவலய பசுமைப் பிரதேசத்தின் நடுவில் அமைந்து, வீதியால் செல்வோரின் கவனத்தை இலகுவில் பெறுவது The Fair mount - Urban Oasis ஆகும்.



112 மூன்று ஆடம்பர படுக்கை அறைகளைக் கொண்ட சொகுசு மாடி வீடுகளை உள்ளடக்கிய இதன் நிர்மாண வேலைகள், சூழல் பாதுகாப்புடன் கூடிய சமூகப் பொறுப்பு வாய்ந்த வகையில் சமீபத்தில் பூர்த்தி செய்யப்பட்டன.

Fairway Condominiums நிறுவனத்தின் பணிப்பாளர் நெலுக டி அல்விஸ் கருத்து வெளியிடுகையில்; "The Fairmount ஐச் சுற்றியுள்ள இடத்தின் இயற்கை புவியியல் தன்மை பாதுகாக்கப்பட்டுள்ளமை எமது திட்டத்தின் முக்கிய அம்சமாகும்" என்று கூறினார். "அயலில் வாழும் சமூகத்தினரின் வாழ்க்கை நிலைமையை மேம்படச் செய்வதற்கும், அங்குள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கும் மனப்பூர்வமான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன" என்று கூறினார்.

The Fairmount உள்ள இடம், அபிவிருத்தி செய்யப்பட்ட இடமல்ல. இந்தக் கட்டடம் அமைந்துள்ள நிலத்தில் ஏற்கனவே இரண்டு தோல் தொழிற்சாலைகள் செயற்பட்டன. அங்கு வசிப்பவர்களும் தனியார் காணியில் சட்டவிரோதமாக பிரவேசித்தவர்களாவர். தோல் தொழிற் சாலையின் கழிவுப்பொருட்கள், சுற்றியுள்ள ஈரலிப்பான பிரதேசத்தை சென்றடைவதனாலும், தோல் தொழிற் சாலையினாலும் அந்தப் பகுதி முழுவதிலும் துர்நாற்றம் நிறைந்திருந்தது.

இன்று நிலைமை முற்றிலும் மாறியுள்ளது. The Fairmount க்குச் செல்லும் வீதிகள் முன்னரிலும் பார்க்க அடையாளம் தெரியாதபடி முற்றிலும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. சில வருடங்களுக்கு முன்னர் மிக மோசமான நிலையிலிருந்த ஒடுங்கிய வீதி தற்சமயம் அகலமான உயர்த்தப்பட்டுள்ள காப்பட் இடப்பட்ட வீதியாக அமைந்து The Fairmount இல் வசிப்பவர்களுக்கு மாத்திரமல்லாமல், அருகிலுள்ள கிராம மக்களுக்கும் நன்மைதரும் வகையில் அமைந்துள்ளது. கால்வாய்களும் நீரோடைகளும் சுத்திகரிக்கப்பட்டு சகல வித கழிவுப்பொருட்களும் அகற்றப்பட்டுள்ளன. வீதிக்கு அருகிலும் The Fairmount ஐ சுற்றியும் அழகான சிற்றாறு ஓடுகிறது. மிகவும் சுத்தமாக உள்ள இந்த சிற்றாற்றின் கரைகள் The Fairmount இனால் சுயமாகவே பராமரிக்கப்படுகின்றன.

வீட்டு வசதியற்ற அயலவர்களுக்கு இந்த வீடுகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது மாத்திரமல்லாமல், அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் The Fairmount இன் அன்பளிப்பாக அவர்களது முச்சக்கர வண்டிகளின் உரிமையாளர்களாக வரும் அதிர்ஷ்டத்தையும் பெற்றுள்ளனர். உள்ளூர் இளைஞர்கள் சுயதொழில் வாய்ப்புகளில் ஈடுபடுவதற்கு உதவும் வகையிலான நிறுவனத்தின் CSR திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. கிராமத்தைச் சேர்ந்தவரும் தற்சமயம் இந்த மாடிவீட்டுத் திட்டத்தில் கடமையாற்றுபவருமான கயான் சம்பத் என்ற இளைஞர் கருத்து வெளியிடுகையில்; "முச்சக்கர வண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது மாத்திரமல்லாமல், கிராமத்து இளைஞர்கள் பலருக்கு சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதிலும் நிறுவனம் உதவியுள்ளது என்றும் பலதரப்பட்ட பயிற்சி நெறிகளில் (காற்று சீராக்கம், அலுமினியம் தொழில் என்பனவற்றில்) அவர்கள் சேர்ந்து கொள்வதற்கு உதவியுள்ளது" என்றும் தெரிவித்தார். இந்தப் பயிற்சி காரணமாக அவர்கள் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.